**பிப்ரவரி 12, 2014**

# <u>மத்திய அரசின் முடிவை குறித்து ஒரு மாநில அரசு விசாரணை நடத்த முடியுமா?</u>

**அருண் ஜேட்லி**

மாநிலங்களவையின் எதிர்கட்சித் தலைவர்

கூட்டாட்சி அமைப்பு முறை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பின் ஒரு பகுதியாக உள்ளது. கூட்டாட்சி கொள்கைகள் திருத்தி அமைக்கப்பட முடியாதவை. மத்திய, மாநிலங்களின் அதிகார வரம்புகள் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளன. தெளிவற்ற பகுதிகள் இதில் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை.

பொதுவாக, கூட்டாட்சி அமைப்பு முறைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று நாம் உணரும்போது, கூட்டாட்சி கொள்கைகளின் விதி மீறல்கள் மத்திய அரசால்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்று சந்தேகம் எழும். மத்திய அரசு, தனது புலனாய்வு அமைப்புகள் மூலம், மாநில அரசுகளில் நிகழும் விஷயங்கள் குறித்து புலனாய்வை மேற்கொள்ள முடியாது. அரசியல் அமைப்பு சட்ட இயந்திரத்தை உடைத்தெறியக்கூடிய வரம்பு மீறிய பிரச்சினைகள், மோசமான நிகழ்வுகள் ஏதாவது நிகழ்ந்திருந்தால் மட்டுமே சட்டப் பிரிவு 356ன் கீழ் உள்ள அதிகாரங்களை அது பயன்படுத்த முடியும். ஒரு வழக்கை விசாரித்து வரும் மாநில புலனாய்வு அமைப்பு அல்லது உயர் நீதி மன்றங்கள் குறிப்பாக அதற்கான ஒப்புதலை அளிக்கும்போது அல்லது உச்ச நீதி மன்றம் உத்தரவு அளித்தால் மட்டுமே மாநில அரசு பணியாளர்களை விசாரணை செய்ய சி.பி.ஐ.க்கு அதிகாரம் உள்ளது.

எனவே, நேற்று தில்லியில் நடந்த விஷயம் குறித்து விமர்சனம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நான் இயற்கை எரிவாயு பொருள்களுக்கான விலை நிர்ணயம் நியாயமானதா அல்லது நியாயமற்றதா என்பதைக் குறித்து கூற வரவில்லை. பாதிக்கப்பட்ட நபர்கள் இந்தப் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்திலோ அல்லது மத்திய அரசு விசாரணை நடத்த வேண்டும் என்று கோருவது அல்லது நீதிமன்ற நடவடிக்கையை நாடுவது போன்றவற்றை மேற்கொள்ளலாம். இப்போது நான் கூற வந்த விஷயம் வேறு. ஒரு மாநில அரசு தனது ஊழல் தடுப்புத் துறை மூலம், மத்திய அரசு எடுத்த ஒரு முடிவு குறித்து விசாரணை நடத்த முடியுமா? என்பதுதான்.

தில்லி, மாநில சட்டசபை கொண்ட ஒரு யூனியன் பிரதேசம். தில்லியின் சட்டம் மற்றும் நீதி நிர்வாகம் 239ஏஏ சட்டப்பிரிவின் கீழ் கட்டுப்படுத்தப்படுகிறது. 1,2 பதிவுகளும் ஏழாவது அட்டவணையின் கீழ் மாநில பட்டியல் 18 ஆகியவை தில்லிக்குப்

பொருந்தாது. பதிவு 1 பொதுத் துறை, பதிவு 2 காவல் துறை மற்றும் பதிவு 18 நிலம் சம்பந்தப்பட்டவை. எனவே பொதுத் துறை மற்றும் காவல்துறை அதிகாரங்களை முறைப்படுத்தும் அதிகாரம் தற்போது தில்லி சட்டமன்றத்திடம் இல்லை. நிர்வாக அதிகாரங்கள் சட்டம் இயற்றும் அதிகாரத்துக்கு இணையானது. எனவே தில்லி அரசிடம் காவல் துறை அதிகாரங்கள் இல்லை. இப்படியானால், தில்லி அரசாங்கத்தின் ஊழல் தடுப்பு பிரிவின் பணி என்ன? இந்த ஊழல் தடுப்பு பிரிவு, ஊழல் கண்காணிப்பு இயக்குனரகத்தின் ஒரு பகுதியாக உள்ளது. சுருக்கமாக சொல்லப்போனால், இது ஊழல் கண்காணிப்பு நடவடிக்கை மட்டுமே காவல் துறை கண்காணிப்பு அதிகாரம் இதற்கு இல்லை. அரசு ஊழியர்களின் தவறுகள் தில்லி அரசுத் துறையில் நடைபெறும் விவகாரங்களை கையாளும் அதிகாரம் ஊழல் கண்காணிப்பு பிரிவிற்கு உள்ளது. தில்லி அரசின் ஊழல் கண்காணிப்பு இயக்குனரகம் அல்லது அதன் கீழ் இயங்கும் ஊழல் தடுப்புப் பிரிவு, ஒட்டுமொத்த தில்லியிலும் நடைபெறும் விவகாரங்களில் வரையறையற்ற அதிகாரங்கத்தைப் பயன்படுத்துவது என்பது, மாநில பட்டியலின் பதிவு 2 சட்டம் தில்லிக்குப் பொருந்தும் என்பதையே காட்டும். இந்த அதிகாரம், குறிப்பாக அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 239 ஏஏ-யின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது. மாநில அரசு இவ்வாறு நடந்துகொள்வது, நாட்டின் தலைநகரம் இயங்கும் தில்லியில் மத்திய அரசுக்கு இணையான அதிகாரம் கொண்ட வேறொரு அதிகார அமைப்பு இயங்குவதற்கு ஈடானது. தனது சொந்த ஊழல் கண்காணிப்பு சட்டம் மற்றும் தில்லி அரசின் ஊழல் கண்காணிப்புச் சட்டம் ஆகிய இரண்டுக்கும் கீழ் மத்திய அரசு இயங்குகிறார் போலாகிவிடும். இதனால், பிரதம மந்திரி முதல் கேபினர் செயலாளர் வரையிலான அனைத்து அரசு ஊழியர்களும் மாநில அரசின் சட்ட வரம்பிற்குள் எளிதாக வந்துவிடுவார்கள். இப்படிப்பட்ட காவல்துறை அதிகாரங்கள் உள்ளனவா என்பதே சந்தேகம்தான். காவல்துறை அதிகார வரம்பிற்குள் மத்திய அரசைக் கொண்டு வருவது, அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறும் கடுமையான குற்றம். தற்போது நடைமுறையில் இருந்து வரும் கூட்டாட்சி அமைப்பு முறை சட்டத்தை மீறும் செயல் இது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தையும் அதன் உள்ளார்ந்த அர்த்தத்துடன் இம்மி பிசகாமல் பின்பற்றுவதற்கு கட்டுப்பாடும் ராஜதந்திரமும் தேவை. அரசியல் அமைப்புச் சட்டங்கள் அடாவடித்தனத்தினால் காப்பாற்றப்பட முடியாது. சரியான நீதித் துறையின் கருத்து வேறு மாதிரியாக இருக்காது என்றே நான் உறுதியாக நம்புகிறேன்.

இணை செயலாளர் அந்தஸ்த்தில் இருப்பவர்கள் மற்றும் விசாரணை அதிகாரிகள் போன்ற அரசு ஊழியர்கள் ‘சிங்கிள்-பாயின்ட் உத்தரவின் கீழ் கொண்டு வரப்படுவதற்கு முன், மத்திய அரசின் ஒப்புதல் தேவை. இந்த உத்தரவை சட்ட ரீதியான எந்த அடிப்படையும் இல்லை என்ற காரணத்தினால் உச்ச நீதி மன்றம் தடைசெய்துள்ளது. இதற்கான சட்ட ரீதியான அதிகாரம் கொண்டுவரப்பட்டது. அப்போதிலிருந்து இந்த சட்ட ரீதியான ஆதரவு பெற்றதிலிருந்து இது உச்ச நீதி மன்றத்தின் முன் சவாலாக இருந்து வருகிறது. சட்டம் ஒழுங்கு மற்றும் காவல் துறை எல்லாம் மாநில அரசின் விவகாரங்கள் என்பது இந்த ஒற்றை-புள்ளி-உத்தரவு

சட்டத்திற்கு பின்னால் உள்ள நியாயங்கள் ஒன்று. ஒரு மாநிலத்தில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர், பிரதம மந்திரியையோ அல்லது கேபினட் செகரட்டரியையோ ஒரு விசாரணைக்காக காவல் நிலையத்துக்கு அழைத்தால் எப்படி இருக்கும்? இந்த அதிகாரம் அரசியல் காரணங்களுக்காகக்கூட தவறாகப் பயன்படுத்தப்படலாம். இப்படிப்பட்ட விசாரணை மேற்கொள்ளப்படுவதற்கு முன், மத்திய அரசின் அனுமதி தேவை என்ற கருத்து வெளியிடப்பட்டது. 'ஒற்றை-புள்ளி-உத்தரவு' விமர்சனத்துக்கு உள்ளானது. மத்திய அரசின் முடிவை குறித்து விசாரணை நடத்த விரும்பிய தில்லி அரசின் செயல், ஒற்றை-புள்ளி-உத்தரவு சட்டத்தின் பின்னால் இருக்கும் நியாயத்தை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது. உற்சாகமும், சாகச செயல்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பின்பற்றும் விஷயத்தில் முன் மாதிரியாக விளங்காது என்பதை ஆம் ஆத்மி கட்சி அரசு உணர வேண்டும்.